[9th September 1960

Sri P. S. CHINNADURAI : இந்த வேலை நிறுத்தத்தின் போது ஏராளமான போலீஸ்காரர்கள், கிராம மணியக்காரர்கள், கணக்குப் பிள்ளைகள், தலையாரிகள் எல்லாம் இதில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றனர். அதன் காரணமாக அரசாங்கமானது அவசியமில்லாத செலவு எவ்வளவாகி இருக்கிறது என்ற கணக்குக் கூடத் தெரியாமல் ஏராளமான பணத்தைச செலவு செய்திருக்கிறது. இந்தப் பணத்தை மத்திய சர்க்காரிடமிருந்து கட்டாயமாகப் பெறுவதற்கு முயற்சி எடுக்கப்படுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அவசியமில்லாத செலவு செய்யப்பட்டது என்பதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. எவ்வளவு செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் அவ்வளவும் மத்திய அரசாங்கத்திடம் இருந்து பெறப்படும் என்று முன்னமேயே தெரிவித்தேன்.

Sri M. KALYANASUNDARAM : ஸார், கனம் அங்கத்தினர் ஸ்ரீ ஏ. வேதரத்தினம் அவர்கள் சொன்னது போல் பொது மக்கள் வரிப் பணத்திலிருந்து செலவு பண்ணக்கூடாது. இந்த ஸ்ட்ரைக்கைத் தூண்டி விட்ட மத்திய அரசாங்க நிதியமைச்சரிடமிருந்து அந்தப் பணத்தை வசூலிக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா ?

DEPUTY SPEAKER : I am not going to allow that question. I disallow it.

Sri T. L. SASIVARNA THEVAR : இந்த வேலை நிறுத்தத்தை உடைப்பதற்காகப் பெரிய உத்தியோகஸ்தர்களிடம் அட்வான்ஸ் ஆக பணம் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த வகையில் செலவான பணத்தை மத்திய அரசாங்கத்திடமிருந்து நம்முடைய சர்க்கார் பெறுவதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : ஸ்ட்ரைக்கை உடைப்பது என்ற பேச்செல்லாம் எதிர்க் கட்சிக்காரர்களுடைய பேச்சு. நியாயமான வகையில் பொது மக்களின் நன்மையை ஒட்டியே ஸ்ட்ரைக்கைச் சமாளிக்க பணம் செலவு செய்யப்பட்டது. இந்தச் செலவும் இந்த அரசாங்கம் செலவு செய்யவில்லை. மத்திய அரசாங்கம் தான் இதற்குப் பொறுப்பு.

Radio and Electric apparatus

* 573 *Q*.—**Sri P. G. MANICKAM** : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) ரேடியோக்களுக்கும், எலெக்ட்ரானிக் சாதனங்களுக்கும் தேவைப்படும் உறுப்புகளை உற்பத்தி செய்யும் எந்தெந்த ஸ்தாபனங்களுக்கு சென்னை ராஜ்யத்தில் லைசென்ஸ் வழங்கப்பட்டிருக்கின்றன ?

(ஆ) 1960-ம் வருடத்தில் இவ்வித லைசென்ஸ் தேவை என்று எத்தனை ஸ்தாபனங்கள் விண்ணப்பித்தன ?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) & (*b*) A statement [a] is placed on the table of the House.

Sri P. G. MANICKAM : ஸார், இவ்வித சாதனங்களை உற்பத்தி செய்ய விரும்புவோர் லைசென்ஸ் எடுப்பது என்றால் 1960-ம் வருஷம் ஜூலை மாதம் 31-ம் தேதிக்குள் விண்ணப்பித்துக் கொள்ள வேண்டுமென்று இந்திய சர்க்கார் வர்த்தக இலாகா தெரிவித்திருக்கிறது. இந்த அறிவிப்பிற்குப் பிறகு இந்திய சர்க்காருக்கோ அல்லது சென்னை ராஜ்ய சர்க்காருக்கோ சீனியர் எஞ்சினியர்களிடமிருந்து எத்தனை விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன ?

The Hon. Sri R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் அவர்கள் "எஸன்ஷியாலிடி சர்டிபிகேட்" வாங்குவதையும், லைசென்ஸ் வாங்குவதையும் பற்றிச் சற்றுக் குழப்பம் செய்து கொண்டு விட்டார் என்று நினைக்கிறேன். இவற்றை வெளிநாடுகளிலிருந்து தருவிக்க "எஸன்ஷி

a Printed as Appendix III on pages 592-59, infra.

9th September 1960]

யாலிடி சர்டிபிகேட்'' வாங்க வேண்டும். அதற்கு இத்தனை காலத்திற்குள் அப்ளிகேஷன் போட வேண்டுமென்று இருக்கிறது. தொழில் நடத்துவதற்கு லைசென்ஸ் வாங்க அப்ளிகேஷன் எப்போது வேண்டு... போடலாம்.

Map burning

* 574 *Q*.—Sri A. A. RASHEED: Sri D. S. AUTHIMOOLAM: } Will the Hon. the Minister for Home be pleased to state the number of persons convicted and fined as a result of burning the map of India on 5th June 1960?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: One hundred and fifty-nine persons have so far been convicted as a result of the "Map-Burning" agitation on 5th June 1960. Of these, 81 were sentenced to pay a fine, but refused to do so, and courted imprisonment.

Sri A. A. RASHEED: May I know among the persons convicted for map burning, how many are women? What is the number of persons still in prison?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: I am sorry, I do not have the information.

Sri K. VINAYAKAM: Did the act of map burning in any public place take place or were these people arrested on the mere suspicion or apprehension that they would commit this kind of offence?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: Certain people were arrested under section 151, Criminal Procedure Code, as a preventive step and they were released the next day. Others were prosecuted for overt action. Whether it was actual burning of the map or whether it was an actual map is the question.

Counterfeit notes

*575 *Q*.— Sri S. M. ANNAMALAI: (on behalf of Sri P. U. SHANMUGAM): கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க் கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஐயன் திருமாளிகை என்னும் கிராமத்தில் கள்ள நோட்டு அச்சடிக்கப்பட்டதாக எவரேனும் கைது செய்யப்பட்டனரா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: Three persons were arrested in Iyenthirumaligai village.

Sri S. M. ANNAMALAI: அதையொட்டி வழக்குத் தொடர்ந்தாகி விட்டதா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: It is under investigation.